First Published : 31 Mar 2012 01:24:38 AM IST

# கோடையில் லாபம் தரும் குறுகிய காலப் பயிர்கள்



கடலூர் அருகே உச்சிமேடு கிராமத்தில் பூத்துக் குலுங்கும் சம்பங்கி பூந்தோட்டம். (உள்படம்) வயலில் பழுக்கத் தயாரான நிலையில் கிடக்கும் வெள்ளரிக்காய். படங்க

கடலூர், மார்ச் 30: கடலூர் மாவட்டத்தில் இவ்வாண்டு கோடையில் பயிரிடப்பட்டுள்ள குறுகிய காலப் பயிர்கள், விவசாயிகளுக்கு நல்ல லாபம் ஈட்டுவதாக அமைந்துள்ளது.

÷கடலூர் மாவட்டத்தில் 96 ஆயிரம் விவசாய ஆழ்குழாய் கிணறுகள் உள்ளன. 1.5 லட்சம் ஏக்கர் டெல்டா பாசனப் பகுதிகளும் உள்ளதால், கடலூர் மாவட்டத்தில் தண்ணீர் அதிகம் தேவைப்படும் நெல், கரும்பு, வாழை மற்றும் ஓரளவுக்கு தண்ணீர் தேவைப்படும் மணிலா உள்ளிட்ட பயிர்களும் அதிக அளவில் பயிரிடப்படுகிறது.

÷ஆனால் இந்த ஆண்டு புயலுக்குப் பிறகு, விவசாயத்தில் பெரிய மாற்றத்தை விவசாயிகள் சந்தித்து வருகிறார்கள். புயலுக்குப் பின் தலைவிரித்தாடும் மின்வெட்டு, வேலைக்கு ஆள்கள் பற்றாக்குறைக் காரணமாக, தண்ணீர் தேவை அதிகம் உள்ள பயிர்களைச் சாகுபடி செய்வதில், விவசாயிகளுக்குப் பெரும் தயக்கத்தை ஏற்படுத்தி இருப்பதாக, வேளாண் அதிகாரிகள் தெரிவிக்கிறார்கள்.

÷விவசாயத்துக்கான மும்முனை மின்சாரம் கடலூர் மாவட்டத்தில் 3 மணி நேரமே வழங்கப்படுகிறது. அதுவும் தொடர்ச்சியாக இல்லை என்கிறார்கள் விவசாயிகள்.

÷புயல் பாதிப்பு மற்றும் மின் பற்றாக்குறைக் காரணமாக, தண்ணீர் தேவை குறைவான, குறுகியகால பயிர்களை நோக்கி விவசாயிகள் பயணிக்க தொடங்கி உள்ளனர்.

÷புயலால் கடலூரை அடுத்த நாணமேடு, உச்சிமேடு உள்ளிட்ட 20-க்கும் மேற்பட்ட கிராமங்களில் கத்தரி, மலர்ச் செடிகள், வெங்காயம் உள்ளிட்ட தோட்டக்லைப் பயிர்கள், நிலத்தில் ஏற்பட்ட உவர்த்தன்மை காரணமாக பெரிதும் பாதிக்கப்பட்டன.

÷இந்நிலையில் தண்ணீர் தேவை அதிகம் உள்ள நெல் பயிருக்கு சிலர் மாறினர். ஆனால் மின்வெட்டு அவர்களை பாடாய்படுத்தி விட்டது.

÷எனினும் எதிர்நீச்சல் எண்ணத்துடன், கடலூரை அடுத்த நாணமேடு, உச்சிமேடு, கண்டக்காடு உள்ளிட்ட பகுதிகளில் கோடையில் குறுகிய காலப் பயிர்களான கத்தரி, சம்பங்கி மலர், கோழிக் கொண்டை மலர், வெள்ளரிக்காய் போன்ற பயிர்களைப் பயிரிட்டவர்கள், மிகுந்த மகிழ்ச்சியுடன் இருப்பதாக நாணமேடு விவசாயி பாக்கியராஜ் தெரிவித்தார்.

÷நெல், கரும்பு பயிரிட்ட விவசாயிகளைவிட, மலர்ச் செடிகள், வெள்ளரிக்காய், தர்ப்பூசணி, மானாவாரி உளுந்து, மானாவாரி மணிலா, எள் போன்ற குறுகியகால கோடைப் பயிர்களைப் பயிரிட்டு உள்ள விவசாயிகள் சிரமமின்றி இருக்கிறார்கள்.

÷ஏனென்றால் ஜனவரிக்குப் பின் பயிரிடப்பட்ட குறுகியகால கோடைகாலப் பயிர்களுக்கு, தண்ணீர் தேவை பற்றி கவலை இல்லை. இதனால் மின்சாரம் பற்றிய சங்கடம் இல்லை. ÷இந்த ஆண்டு கோடைகாலப் பயிர்கள் நல்ல லாபம் அளித்து உள்ளன என்றும் பாக்கியராஜ் தெரிவித்தார்.

÷கடலூர் மாவட்டத்தில் இந்த ஆண்டு 2 ஆயிரம் ஏக்கரில் தர்ப்பூசணி, வெள்ளரியும், 15 ஆயிரம் ஏக்கரில் சம்பங்கி, காட்டுமல்லி, கோழிக்கொண்டை, கனகாம்பரம் போன்ற மலர்ச்செடிகளும் பயிரிடப்பட்டு இருப்பதாக வேளாண் துறை தெரிவிக்கிறது.

÷காட்டுமன்னார்கோவில், அறந்தாங்கி, சித்தமல்லி ஆகிய பகுதிகளில் தர்ப்பூசணியும், கடலூர், குறிஞ்சிப்பாடி, புவனகிரி பகுதிகளில் வெள்ளரியும் அதிகமாகப் பயிரிடப்பட்டு உள்ளன.

÷75 நாள் பயிரான வெள்ளரியில், எவ்வித செலவும், பராமரிப்பு மின்றிக் ஏக்கருக்கு ரூ. 20 ஆயிரத்துக்கு மேல் கிடைப்பதாக விவசாயிகள் தெரிவிக்கிறார்கள்.

÷கடலூர் பகுதியில் பயிரிடப்பட்டு உள்ள கத்தரிக்காய்க்கு தற்போது கிலோ ரூ. 25 வரை தோட்டத்திலேயே விலை கிடைக்கிறது.

÷இதனால் ஏக்கருக்கு ரூ. 80 ஆயிரம் வரை குறுகிய காலத்தில் லாபம் கிடைக்கும் என்கிறார்கள் விவசாயிகள்.

÷சம்பங்கி மலர்கள் தற்போது தோட்டத்திலேயே, கிலோ 50 வரை விற்பனை செய்யப் படுகிறது. சம்பங்கி மலரில் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ. 1.5 லட்சமும், கோழிக் கொண்டையில் ஏக்கருக்கு 50 ஆயிரமும் லாபம் கிடைக்கும் என்றும் விவசாயிகள் தெரிவித்தனர்.

÷கடலூர் மாவட்டத்தில் நிலத்தடி நீர் மட்டம் நாளுக்கு நாள் கீழே போய்க் கொண்டு இருக்கிறது. நாளொன்றுக்கு 3 மணி நேரம் என்ற நிச்சயமற்ற மின்சாரம், தண்ணீர் பற்றாக்குறை, வேளாண் வேலைகளுக்கு ஆள்கள் கிடைக்காமை போன்ற பிரச்னைகளை கருத்தில் கொண்டு பார்க்கும்போது, அரசு உள்ளிட்ட யாருடைய தயவும் இன்றி, இயற்கை வழியில் குறுகிய காலப் பயிர்களைப் பயிரிட்டு, இனி நிம்மதியாக விவசாயம் செய்வதுதான் புத்திசாலித்தனம் என்கிறார்கள், விவரம் தெரிந்த விவசாயிகள்.

### தேனி கொட்டை முந்திரியில் மகசூல் பாதிப்பு: விவசாயிகள் கவலை

First Published : 31 Mar 2012 11:04:20 AM IST

தேனி, மார்ச் 30: தேனி மாவட்டத்தில் பருவ மழை தவறியதாலும், கோடை வெயில் சுட்டெரித்து வருவதாலும் கொட்டை முந்திரியில் பெருமளவு பூக்கள் உதிர்ந்துள்ளதால் மகசூல் பாதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. ஆண்டிபட்டி வட்டாரம், கடமலைக்குண்டு, வருஷநாடு பகுதிகளில் 1,000 ஏக்கர் பரப்பளவுக்கும் மேல், கொட்டை முந்திரி சாகுபடி நடைபெற்று வருகிறது. கொட்டை முந்திரி பூத்து, காய் பிடிக்கும் பருவத்தில் பருவமழை தவறியதாலும், தொடர்ந்து கோடை வெயில் சுட்டெரித்து வருவதாலும் பூக்கள் உதிர்ந்தும், கருகியும் காணப்படுகின்றன. இதனால் மகசூல் பாதித்து நஷ்டம் ஏற்படும் நிலை உள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்தனர். ஒரு ஏக்கரில் உழவு, உரம் உள்ளிட்டவைகளுக்கு ரூ.10 ஆயிரம் வரை செலவு ஏற்பட்டுள்ள நிலையில், உற்பத்திச் செலவுக்கும் குறைவாகவே மகசூல் காணப்படுவதால் விவசாயிகள் கவலையில் உள்ளனர்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

### தானிய உற்பத்தி இலக்கு 28 கோடி டன்

மார்ச் 31,2012,00:19

புதுடில்லி:வரும் 2020-21ம் நிதியாண்டில், நாட்டின் உணவு தானியங்கள் உற்பத்தியை, 28.06 கோடி டன்னாக உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக, மத்திய வேளாண் துறை இணை அமைச்சர் சரண் தாஸ் மகந்த், பார்லிமென்டில் தெரிவித்தார்.



நடப்பு 2011-12ம் நிதியாண்டில், நாட்டின் உணவு தானியங்கள் உற்பத்தி, 25.04 கோடி டன்னாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதனுடன் ஒப்பிடும்போது, 2020-21ம் நிதியாண்டிற்கான உற்பத்தி இலக்கு, ஆண்டு அடிப்படையில், 1.34 சதவீதம் என்றளவில் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.மத்திய வேளாண் அமைச்சர் சரத் பவார் இதுகுறித்து கூறியதாவது:
நடப்பு 12வது ஐந்தாண்டு திட்டத்தின் இறுதி ஆண்டில் (2016-17), நாட்டின் நெல் உற்பத்தி, 11.02 கோடி டன்னாகவும், கோதுமை உற்பத்தி, 8.91 கோடி டன்னாகவும் இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில், இரண்டாவது முன்கூட்டிய மதிப்பீட்டின் படி, உள்நாட்டில், நெல்லுக்கான தேவை, 9.88 கோடி டன்னாகவும், கோதுமைக்கான தேவை, 7.74 கோடி டன்னாகவும் இருக்கும்.
அதேசமயம், இவ்வாண்டில், நெல் உற்பத்தி, 10.28 கோடி டன்னாகவும், கோதுமை உற்பத்தி, 8.83 கோடி டன்னாகவும் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறு பவார் கூறினார்.நாட்டின் உணவு தானிய உற்பத்தியை அதிகரிக்கும் வகையில், பல்வேறு ஆராய்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக, பயிர் மேலாண்மை, உற்பத்தி அதிகரிப்பு, பூச்சி தாக்குதலிலிருந்து தடுப்பதற்கான புதிய தொழில்நுட்பங்கள் போன்றவற்றிற்காக, ஆராய்ச்சி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தினகரன்

## விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் பகீர் புகார் பாலில் அடர்த்தியை காண்பிக்க யூரியாவை கலக்கும் கொடுமை

பதிவு செய்த நேரம்:2012-03-31 10:49:21

தர்மபுரி: அடர்த்தியை கூட்டி காண்பிப்பதற்காக பாலில் ரசாயன உரமான யூரியா கலப்படம் செய்யப்படுவதாக தர்மபுரியில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் புகார் தெரிவிக்கப்பட்டது.

தர்மபுரி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நேற்று நடைபெற்றது. ஆட்சியர் லில்லி தலைமை தாங்கினார். கூட்டத்தில் அனைத்து துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர். தமிழக விவசாயிகள் சங்க மாநில தலைவர் சின்னசாமி பேசியதாவது:

விவசாயிகள் விளைபொருட்கள் சாகுபடி செய்வதற்காக கடன் வாங்குகிறார்கள். சாகுபடியில் இழப்பு ஏற்படும்போது கடன் திருப்பி செலுத்த சற்று தாமதம் ஏற்படுகிறது. அதற்குள் வங்கியில் விவசாயின் போட்டோவை ஒட்டி இழிவுபடுத்தும் செயல் நடக்கிறது. பாலக்கோடு பாரத ஸ்டேட் வங்கியில் கடன் செலுத்தாத விவசாயிகளின் போட்டோ அறிவிப்பு பலகையில் ஒட்டப்பட்டுள்ளது. அந்த போட்டோக்களை உடனே வங்கி நிர்வாகம் அகற்ற வேண்டும்.

ஆட்சியர்: வங்கி அதிகாரியிடம் தெரிவித்து உடனே அகற்றப்படும்.

விவசாயி சுப்பிரமணியம்: தர்மபுரி மாவட்டத்தில் பாலில் அடர்த்தி ஏற்படுத்தும் வகையில் யூரியாவை பயன்படுத்துகின்றனர். இதனால் உடல் உபாதைகள் ஏற்படுகிறது. பாலில் கலப்படத்தை தடுக்க, சுகாதாரத்துறை மூலம் சோதனை செய்யவேண்டும்.

ஆட்சியர்: பாலில் உள்ள கலப்படங்களை கண்டறிய விரைவில் உணவு பாதுகாப்புத்துறை மூலம் சோதனை செய்யப்படும்.

## மின்வெட்டு, கோடை வெயிலால் 600 ஏக்கர் வேர்க்கடலை காய்ந்தது விவசாயிகள் கண்ணீர்

பதிவு செய்த நேரம்:2012-03-31 01:14:13

சோளிங்கர், :

கோடை வெயில், மின்வெட்டு காரணமாக தண்ணீர் இருந்தும் பாய்ச்ச முடியாமல் பயிரிடப்பட்ட 600 ஏக்கர் வேர்க்கடலை காய்ந்து போய் உள்ளது. இதனால் விவசாயிகள் வேதனையடைந்துள்ளனர். சோளிங்கரை சுற்றி கிராமங்கள் அதிகம் என்பதால் இப்பகுதி மக்கள் விவசாயத்தையே அதிகளவு நம்பியுள்ளனர். இதில் நீர் வளம் இல்லாமல் பெரும்பாலான விவசாயிகள் தங்களது விளை நிலங்களை தரிசு நிலங்களாகவே வைத்துள்ளனர். இதனால் முட்புதர்கள் வளர்ந்து காடுபோல் காட்சியளிக்கிறது. மேலும் நீர்வளம் இருக்கும் ஒருசில பகுதிகளில் மட்டுமே விவசாயம் நடைபெற்று வருகிறது. இந்நிலையில், சோளிங்கரை சுற்றியுள்ள சுமார¢ 600 ஏக்கர் விவசாய நிலங்களில் வேர்க்கடலை பயிரிட்டுள்ளனர். இப்பயிர்கள் மகசூல் நேரத்தில் கோடை வெயில், மின் வெட்டு காரணமாகவும் தண்ணீர் இருந்தும் பயிர்களுக்கு தண்ணீர் பாய்ச்ச முடியவில்லை. இதனால் விளை நிலங்கள¢ வெடித்தும், பயிர்கள் கருகியும¢ வருகின்றன. இதனால் விவசாயிகள் மிகுந்த வேதனையடைந்துள்ளனர்.

---

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

## *3 மாதங்களில் விலை 100 சதவீதத்திற்கு மேல் உயர்வு ஏலக்காய் உள்ளிட்ட 7 விளைபொருள்கள் முன்பேர வர்த்தகத்திற்கு தடை வருமா?*



தபாஷ் தலுக்தார்

மும்பை

கடந்த மூன்று மாதங்களில் விலை 100 சதவீதத்திற்கு மேல் அதிகரித்துள்ளதால், உருளைகிழங்கு, கடுகு, கொண்டைகடலை, ஏலக்காய், புதினா எண்ணெய், கருமிளகு, சோயாபீன் ஆகிய ஏழு விளைபொருள்கள் மீது முன்பேர வர்த்தகம் மேற்கொள்ள தடை விதிக்கப்படுமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

உருளைக்கிழங்கு

மேற்கண்ட விளைபொருள்களில் ஏலக்காய் விலை 185 சதவீதமும், உருளைக்கிழங்கு விலை 170 சதவீதமும், புதினா எண்ணெய் விலை 172 சதவீதமும் உயர்ந்துள்ளது. கடுகு, உருளைக்கிழங்கு, சோயாபீன், கொண்டைக்கடலை, ஆகிய விளைபொருள்கள் விலை உயர்வதால் உணவு பணவீக்கம் அதிகரித்து, நுகர்வோர்களுக்கு பாதிப்பு ஏற்படும்.

செயற்கையான முறையில் விலையை உயர்த்தும் வகையில், லாப நோக்கம் கருதி, ஊக அடிப்படையில் வர்த்தகம் நடைபெறுகிறதா என்பது குறித்து எஃப்.எம்.சி. ஆய்வு செய்து வருகிறது.

கொத்தவரங்காய் விலை கடந்த ஓர் ஆண்டு காலத்தில் 4 மடங்கு முதல் 9 மடங்கு வரை உயர்ந்தது. இதனையடுத்து, என்.சி.டீ.இ.எக்ஸ். முன்பேர சந்தையில் இதன் மீது வர்த்தகம் மேற்கொள்ள தடை விதிக்கப்பட்டது. இதன் காரணமாக கொத்தவரங்காய் உற்பத்தியில் முன்னிலை வகிக்கும் ராஜஸ்தான் மாநிலத்தின் ஜோத்பூர் சந்தையில் விலை குவிண்டால் ஒன்றுக்கு ரூ.1,500 குறைந்தது.

பொருள்கள் விலையில் ஏற்படும் திடீர் ஏற்ற, இறக்கங்களால் உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோர்களுக்கு பாதிப்பு ஏற்படக்கூடாது என்ற நோக்கத்தில் முன்பேர வர்த்தகம் நடைபெறுகிறது. இதன்படி, ஒரு பொருளை ஒரு குறிப்பிட்ட தேதியில், ஒரு நிர்ணயிக்கப்பட்ட விலையில் வாங்குவதற்கு அல்லது விற்பனை செய்வதற்கு இரண்டு முதலீட்டாளர்கள் மத்தியில் ஒப்பந்தம் மேற்கொள்ளப்படுகிறது. இதில், சில முதலீட்டாளர்கள் லாப நோக்கம் கருதி செயல்படுவதால், பொருள்கள் விலை செயற்கையான முறையில் உயருகிறது.

லாப நோக்கம்

ஏழு விளைபொருள்கள் விலை உயர்வுக்கு முதலீட்டாளர்கள் லாப நோக்கம் கருதி செயல்பட்டதுதான் காரணம் என்று கண்டறியப்பட்டால், அந்த பொருள்களின் மீதான முன்பேர வர்த்தகத்திற்கு தடை விதிக்கப்பட வாய்ப்புள்ளது.

## நடப்பு நிதி ஆண்டில் பிப்ரவரி மாதம் வரை உரம் இறக்குமதி 7 சதவீதம் சரிவு

*நடப்பு நிதி ஆண்டில் ஏப்ரல் முதல் பிப்ரவரி வரையிலான 11 மாதங்களில் உரங்கள் இறக்குமதி 7 சதவீதம் சரிந்து 68.70 லட்சம் டன்னாக குறைந்துள்ளது. இது, சென்ற நிதி ஆண்டின் இதே காலத்தில் 74.10 லட்சம் டன்னாக இருந்தது. மத்திய உரத் துறைக்கான ராஜாங்க அமைச்சர் ஸ்ரீகாந்த் ஜனா நாடாளுமன்ற மக்களவையில் இந்த புள்ளிவிவரத்தை அண்மையில் சமர்ப்பித்தார்.*

*மற்றொரு கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் யூரியாவின் சில்லரை விற்பனை விலையை அரசு உயர்த்தவில்லை என்று குறிப்பிட்டார். அதே சமயம் சர்வதேச சந்தையில் விலை உயர்ந்ததால் பொட்டாசியம், நைட்ரஜன் போன்ற சில உரங்களின் சில்லரை விற்பனை விலை உயர்ந்து விட்டது. 2011–12 ரபி பருவத்தில் (அக்டோபர்–மார்ச்) டீ.ஏ.பி. உரத்திற்கான தேவை 51.60 லட்சம் டன்னாக இருந்தது. எனினும் தேவைக்கு அதிகமாக 56.20 லட்சம் டன் உரம் கிடைத்தது என்றும் அமைச்சர் தனது பதிலில் கூறியுள்ளார்.*

*நம் நாட்டில் யூரியா உரமே மிகவும் அதிகமாக பயன்படுத்தப்படுகிறது. ரசாயன உரங்களின் உபயோகம் அதிகரித்து வருவதன் காரணமாக பல விதங்களில் இடர்பாடுகள் ஏற்படுகின்றன. மண் வளம் கெடுவதுடன், மத்திய அரசின் உர மானிய சுமையும் உயர்ந்து வருகிறது. எனவே இயற்கை உர பயன்பாட்டை அதிகரிக்கும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

## குன்னூர் டீசர்வ் ஏலத்தில் 75 சதவீத தேயிலை தூள் விற்பனை

*குன்னூர், மார்ச்.31–*

*குன்னூர் டீசர்வ் ஏலத்தில் 75 சதவீத தேயிலை தூள் விற்பனையாது.*

*டீசர்வ் ஏலம்*

*நீலகிரி மாவட்டத்தில் கூட்டுறவு தேயிலை தொழிற் சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் தேயிலை தூள் குன்னூர் டீசர்வ் ஏல மையத்தில் விற்பனை செய்யப்படுகிறது. இதற்கான ஏலம் வாரந்தோறும் புதன் கிழமை நடைபெற்று வருகிறது.*

*விற்பனை எண் 13–க்கான ஏலம் கடந்த 28–ந் தேதி நடை பெற்றது. ஏலத்துக்கு மொத்தம் 3 லட்சத்து 61 ஆயிரத்து 131 கிலோ தேயிலை தூள் வந்தது. இதில் 2 லட்சத்து 55 ஆயிரத்து 902 கிலோ இலை ரகமாகவும், 1 லட்சத்து 5 ஆயிரத்து 229 கிலோ டஸ்ட் ரகமாகவும் இருந்தது.*


*75 சதவீதம் விற்பனை*

*ஏலத்தில் விற்பனைக்கு வந்த தேயிலை தூளின் அளவில் 75 சதவீத தேயிலை தூள் விற்பனையானது. கடந்த வாரத்தை போன்று விலை நிலவரம் இருந்தது. தரமான தேயிலை*

*தூளுக்கு ரூ.2 விலை உயர்வு ஏற்பட்டது.*

***தேயிலை தூளின் சராசரி விலையாக இலை ரகத்தின் சாதாரண வகை ரூ.46–ல் இருந்து ரூ.51 வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் ரூ.55–ல் இருந்து ரூ.77 வரையிலும் ஏலம் சென்றது. டஸ்ட் ரகத்தின் சாதாரண வகை ரூ.49–ல் இருந்து ரூ.56 வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் ரூ.59–ல் இருந்து ரூ.77 வரையிலும் ஏலம் சென்றது. விற்பனை எண் 14–க்கான ஏலம் வருகிற 4–ந் தேதி நடக்கிறது.***

# மஞ்சூர் பகுதியில் காப்பி விளைச்சல் அமோகம்



மஞ்சூர் பகுதியில் ஒரு தோட்டத்தில் காப்பி செடிகளில் காய்கள் அறுவடைக்கு தயார் நிலையில் உள்ள காட்சி

மஞ்சூர், மார்ச்.31–

மஞ்சூர் பகுதியில் காப்பி விளைச்சல் அமோகமாக உள்ளதால், அதை விற்பனைக்கு தயார் படுத்தும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

## காப்பி தோட்டங்கள்

மஞ்சூர் மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளான மட்டகண்டி, தூனேரி, குந்தா, கோக்கலாடா, பெங்கால் மட்டம், கைக்காட்டி, மேலூர், முக்கிமலை உள்பட பல்வேறு பகுதிகளில் கடந்த சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்பு எங்கு நோக்கினும் காப்பி தோட்டங்கள் காணப்பட்டது.

இதைத்தொடர்ந்து மாற்றுப் பயிராக கடந்த சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்பு காப்பி தோட்டங்கள் மெல்ல மெல்ல, விவசாயிகளால் அழிக்கப் பட்டு, தேயிலை தோட்டங் களாக மாற்றப்பட்டன.

## விளைச்சல் அதிகரிப்பு

அதே நேரத்தில் மேற்கண்ட பகுதிகளில் ஆங்காங்கே ஊடு பயிராக தோட்டங்களின் நடுவே சுமார் நூற்றுக்கணக்கில் காப்பி செடிகள் அழிக்கப் படாமல் விடப்பட்டன. இந்த ஊடு பயிரான காப்பி செடிகளில் இருந்து காப்பி கொட்டைகள் நன்கு விளைச்சலை தருகிறது ஆண்டு தோறும் பிப்ரவரி–மார்ச், ஜுன்–ஜுலை, அக்டோபர் –நவம்பர் ஆகிய 3 முக்கிய பருவ காலங்களில் காப்பி விளைச்சல் அதிகரித்து காணப்படுகிறது.

ஒரு ஏக்கரில் ஊடு பயிராக உள்ள சுமார் 100 காப்பி செடிகள் முதல் 200 முதல் 300 கிலோ வரை காப்பி கொட்டைகள் கிடைக்கிறது. இதனால் ஒரு வருடத்திற்கு ஒரு ஏக்கருக்கு ஒரு விவசாயிக்கு குறைந்த பட்சம் ரூ.20 ஆயிரம் முதல் ரூ.30 ஆயிரம் வரை கூடுதல் வருமானம் ஏற்படு கிறது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## அறுவடைக்கு தயார்

தற்சமயம் மஞ்சூர் பகுதிகளில் கடந்த மாதம் ஒரு சில பகுதியில் காப்பி விளைச் சலும், ஒரு சில பகுதிகளில் தற்சமயம் காப்பி செடிகள் பூ பூத்தும், காய்த்தும் நல்ல விளைச்சலை தந்துள்ளது. விளைச்சல் அமோகம் என்பதால் இன்னும் சில நாட்களில் அறுவடைக்கு தயாராகி விடும்.

தற்சமயம் மஞ்சூர் அருகே உள்ள பிக்கட்டி, கெரப்பாடு ஆகிய பகுதிகளில் உள்ள தேயிலை தோட்டங்களில் ஊடு பயிராக பயிரிடப்பட்ட காப்பி செடிகளில் மகசூல் அதிகரித்துள்ளதால் அறு வடை செய்யும் பணியில் விவ சாயிகள் ஈடுபட்டு வருகிறார்கள். மேலும் பிக்கட்டி பகுதியில் விவசாயிகள் அறுவடை செய்த காப்பி கொட்டைகளில், தோல் நீக்கி காய வைத்து தயார் படுத்தும் பணியில் ஈடுபட்டு வருகிறார்கள்.

மேலும் இந்த காப்பி கொட்டைகள் தயார் செய்ய அரசு மானிய விலையில் எந்திரம் வழங்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.